**21.12.2022**

**OS.No. 188/2018 PW : 2, திரு. மணி**

**1, 3, 4, 7 முதல் 21 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை...**

வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் என் ஊரைச் சேர்ந்தவர்கள். வாதி தான் என்னை சாட்சி சொல்ல அழைத்து வந்தார். வாதி பாகம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். சொத்துக்கள் எங்கு எங்கு இருக்கிறது என்று எனக்கு தெரியும். சொத்துக்களின் மொத்த அளவு 20 ஏக்கர் இருக்கும். இவ்வழக்கில் சொத்துக்களை எத்தனை அயிட்டமாக காட்டியுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களில் சில சொத்துக்களை 1ஆம் பிரதிவாதி 4ஆம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார். வாதியும் சில சொத்துக்களை நமச்சிவாயம் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார். அது அவர் வாங்கிய சொத்துக்கள் ஆகும். கடந்த 15, 20 வருடமாக வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் நகரியில் கடை வைத்து வியாபாரம் செய்கிறார்கள். தாவா சொத்துக்களில் டி.டி. கண்டிகையில் அதற்கு முன்னர் விவசாயம் செய்தார்கள். 20, 25 வருடத்திற்கு முன்னர் டி.டி. கண்டிகையில் இருந்தார்கள். வாதி ஒயின்ஷாப் நடத்தியது எனக்கு தெரியாது. வாதி சில ஆவணங்களை ரத்து செய்யவேண்டும் என்று பரிகாரம் கேட்டிருக்கும் நிலையில் அந்த ஆணங்களை ஏன் ரத்து செய்யவேண்டும் என்று நான் வாதியிடம் கேட்டனா என்று கேட்டால் கேட்கவில்லை. என்னுடைய முதல் விசாரணையில் 1ஆம் பிரதிவாதி நிறைய சொத்துக்களை விற்றுவிட்டார் என்று சொல்லியுள்ளேன். அவர் விற்ற விவரம் எனக்கே தெரியும். அவரிடம் கிரையம் வாங்கியவர்களை தரப்பினர்களாக இவ்வழக்கில் சேர்த்தீர்களா என்று வாதியிடம்

நான் கேட்கவில்லை. அவர் கூட்டுகுடும்பத்திற்காக சொத்துக்களை விற்றார். இவ்வழக்கு நிலுவையில் இருந்தபோது 4ஆம் பிரதிவாதியான சோமசுந்தரத்திடம் வாதி பிரச்சனை செய்து பணம் கேட்டாரா என்று எனக்கு தெரியாது. நகரியில் உள்ள சொத்துக்கள் சம்பந்தமாக பாகப்பிரிவினை நடந்ததாக வாதி என்னிடம் சொன்னாரா என்று கேட்டால் டி.டி. கண்டிகையில் வைத்து பாகம் நடந்ததாக சொன்னார். வாதி மத்தியஸ்தம் செய்ய என்னை அழைத்தபோது ஏற்கனவே பாகம்பிரித்த பின்னர் ஏன் மீண்டும் மத்தியஸ்தம் செய்ய சொல்கிறாய் என்று வாதியிடம் கேட்டேனா என்று கேட்டால் நகரியில் உள்ள சொத்தை பொறுத்து பாகம் நடந்ததாக சொன்னார். 1ஆம் பிரதிவாதி கேசவராஜுகுப்பத்தில் உள்ள 5 ஏக்கரையும், எங்கள் அருகில் உள்ள 2, 3 சொத்துக்களை விற்றுவிட்டார். வாதியும் அவரது சகோதரர்களும் நிறைய சொத்துக்களை விற்றுவிட்டாரா என்று எனக்கு தெரியாது. அவருக்கு சகோதரிகள் இருக்கிறார்கள். சகோதர, சகோதரிகளுக்கு இடையே பாகம் நடக்கவில்லை. நான் மத்தியஸ்தம் செய்தபோது வாதிகளிடம் அவரது சகோதரிகளை அழைத்துவா என்று நான் கேட்கவில்லை. வாதியும், அவரது சகோதரர்களும் சொத்துக்களை ஏற்கனவே பாகம் செய்து கொண்டார்கள் என்றும் ஆகவே அவர்கள் கிரையம் செய்து கொடுத்த போது மற்ற சகோதரர்கள் கிரைய ஆவணத்தில் கையொப்பம் செய்து கொடுத்தார்கள் என்றும் அது எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. 2ஆம் பிரதிவாதிக்கும் அவரது முதல் மனைவிக்கும் பிரச்சனை நடந்து பஞ்சாயத்து நடந்ததா என்று எனக்கு

தெரியாது. 2ஆம் பிரதிவாதியின் முதல் மனைவி தற்போது எங்கே இருக்கிறார் என்று எனக்கு தெரியாது. அவர்களுக்கு விவாகரத்து ஆகிவிட்டதா என்று எனக்கு தெரியாது. வாதி நகரியில் 10 வருடம் ஒயின்ஷாப் நடத்தினாரா என்றும் அதில் அவருக்கு கடன் ஏற்பட்டதா என்று எனக்கு தெரியாது. 1ஆம் பிரதிவாதி தான் அந்த கடன் முழுவதையும் அடைத்தாரா என்று எனக்கு தெரியாது. வாதிக்கும், 1ஆம் பிரதிவாதிக்கும் இடையே நான் மத்தியஸ்தம் எதுவும் செய்யவில்லை என்றும் வாதியும் என்னை அழைக்கவில்லை என்றும் நான் வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.